# முறைப்பாட்டுக்கு தடைவிதிப்பு....பாதை திறப்பு...

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில் வெலிகம பிரதேச சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் வரக்கபிட்டிய கிராமத்திற்கு பிரவேசிக்கும் பாதையை அகலப்படுத்தக் கோரி பல ஆண்டு காலமாக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் வெற்றி பெறுவதற்கு தகவல் அறியும் உரிமை உதவியாக அமைந்ததென வரக்காபிட்டிய கிராமத்தில் வசிக்கும் சிறிசேன மகிச்சியுடன் தெரிவித்தார்.

கிராம மக்களை ஒன்று திரட்டி இந்த பாதையை 10 அடி பாதையாக அகலப்படுத்திக்கொள்ளும் கோரிக்கையை சிறிசேன 2014இல் வெலிகம பிரதேச சபையில் சமர்ப்பித்தார். அதேசமயம் ஒக்டோபர் மாதம் அந்த கோரிக்கைக்கு வெலிகம பிரதேச சபையின் அங்கீகாரம் கிடைத்ததோடு 2015 மே மாதம் 22 திகதி அதற்கான வர்த்தமானியும் வெளியிடப்பட்டது. அதன் பின்னர் பிரதேச சபை ரத்தானதால் வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தும் வீதி அபிவிருத்திப் பணி இடைநடுவில் கைவிடப்பட்டது.

எனினும், கிராம மக்கள் எப்படியாவது இதை சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருந்ததால் தொடர்ச்சியாக போராடி வந்தது மட்டுமல்லாது பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களின் கவனத்திற்கும் அந்த விடயத்தை கொண்டு சென்றனர். அதன் பயனாக, இந்த செயல் திட்டத்தை முன்னெடுக்குமாறு வெலிகம பிரதேச சபையின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டதால், அவர் பணிகளைத் தொடங்குவதற்கான ஆரம்ப நில அளவைப் பணிகளை ஆரம்பித்தார். ஆயினும், 2018 டிசம்பர் மாதம் 14 திகதியிடப்பட்டிருந்த இறுதி நில அளவைக்கான கட்டளை பிரதேச சபையின் இடையீட்டால் திடீரென இடைநிறுத்தப்பட்டது.
சிறிசேன எமது நிறுவனத்தின் உதவியுடன் தகவல் பெறுவதற்கான கோரிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து அளவைப் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டதற்கான காரணத்தை பிரதேச சபையில் வினவினார். அதன் பின்னர் அவர் அளித்த மேன்முறையீட்டுக்கு கிடைத்த பதிலில் வரக்கபிட்டிய வீதி அபிவிருத்திப் பணி தொடர்பாக சில பிரதேச வாசிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளதால் இறுதி அளவைக்கான கட்டளை நிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதில் மேலும், பாதையின் ஒரு பகுதி மட்டும் அபிவிருத்தி செய்யப்படுவதை சிலர் விரும்பவில்லை எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சிறிசேனவும் கிராமமக்களும் அந்த பாதையில் அபிவிருத்தி செய்வதற்கு இன்னொரு பகுதி இல்லாததால், கிடைத்துள்ள பதில் தம்மை திசைதிருப்புவதுபோல் உள்ளதாக தெரிவித்தனர்.

அதன்படி, மீண்டும் செயல்பட தொடங்கிய சிறிசேன, அந்த பாதை அபிவிருத்தி செய்யப்படுவதை எதிர்த்து மனு கொடுத்தவர்கள் யார் என்பதையும் அந்த மனுக்களின் பிரதிகளையும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரினார்.

அதற்கு பதிலும் கிடைத்தது. யார் யார் மனு கொடுத்துள்ளனர் என்பதை ஆராய்ந்தபோது நான்கு பேர் மனு கொடுத்துள்ளனர் என்ற விபரமும், அவர்கள் அபிவிருத்தி செய்யவுள்ள பாதை அமைந்துள்ள பிரதேசத்தில் வசிக்காதவர்கள் என்ற விபரமும் தெரிய வந்தது. அதன் பின்னர் சிறிசேனவும் கிராம மக்களும் மீண்டும் பிரதேச சபைக்கு தமது எதிர்ப்பைத் தெரிவிக்க தயாரானார்கள். எதிர்ப்பு வெளிப்படும் முன்னரே பிரதேச சபை அந்த பாதையை வெறும் மூன்றே நாட்களில் துரிதமாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்தது.

## தகவல் அறிவு

2020 மார்ச இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்கள்
கேள்வி இலக்கம் 01 - 2016ஆம் ஆண்டு / கேள்வி இலக்கம் 02 - 14 வேலை நாட்களுக்குள்

தகவல் பற்றிய அறிவுக்கு – பின்வரும் கேள்விகளுக்கான பதில்களை எமக்கு அனுப்பு வைக்கவும்.

**01.** பின்வருவனவற்றுள் எந்த அடிப்படையின் கீழ் கோரிக்கை விடுத்தால் 48 மணித்தியாலங்களுக்குள் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்?
A. உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளவிடத்து
B. தனிப்பட்ட சுதந்திரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளவிடத்து
C. உயிருக்கும் தனிப்பட்ட சுதந்திரத்திற்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளவிடத்து
D. மேலுள்ள எதுவும் இல்லை.

**02.** பொது அதிகார சபையொன்றில் விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் மேன்முறையீட்டு உத்தியோகத்தரிடம் பின்வருவனவற்றின் எக்காலப் பகுதியினுள் மேன்முறையீடு செய்யலாம்?
A. 14 வேலை நாட்களுக்குள்
B. பொதுவான 14 நாட்களுக்குள்
C. 21 வேலை நாட்களுக்குள்
D. பொதுவான 21 நாட்களுக்குள்

**உங்களுடைய பதிலை 077 432 3285 என்ற இலக்கத்திற்கு பின்வருமாறு குறுந்தகவல் மூலம் அனுப்பி வையுங்கள்.**
<**உங்கள் பெயர்**> space <**முகவரி**> space <**பதில் 01**> space <**பதில் 02**>

**உங்களுக்கு இச் செய்தித்தாள் தேவையற்றது எனின், அதனை கீழ் காணும் முகவரிக்கு திருப்பி அனுப்புங்கள்.**

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

**ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா**
**இல 5/1, எலிபேங்க் வீதி,**
**கொழும்பு 5.**

**தொலைபேசி - (94) 11 4396781, 4369782, 4369783**
**தொலை நகல் - (94) 11 2501707**
**மின்னஞ்சல் -** tisl@tisrilanka.org



# குரல்

இரண்டாம் பதிப்பு

"குரல் அற்றோரின் குரல்"

2020 ஏப்ரல் / ஜூன்

*இச்செய்தித்தாள் தயாரிப்பும் அஞ்சல் செய்யும் பணிகளும் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவானது.



## நாம் நேர்மையான தேர்தலுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்

காலனித்துவம் நிலவிய போது 1931இல் அறிமுகம் செய்யப்பட்ட டொனமூர் அரசியல் அமைப்பின் ஊடாக கிடைத்த சர்வஜன வாக்குரிமை இலங்கையின் அரசியல் கலாசாரத்தை புதிய ஒரு திசையில் பயணிக்கச் செய்தது. அன்று தொடக்கம் 89 வருடகாலமாக எமது நாட்டு பிரஜைகள் நான்கு அரசியலமைப்புகளுக்கு உட்பட்டு பல்வேறு மட்டங்களிலிருந்து மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக தமது வாக்குரிமையை பயன்படுத்தியுள்ளனர். எமது நாட்டில் முதல் குடிமகனாக கருதப்படுகின்ற ஜனாதிபதி தொடக்கம் பாராளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்களும், உள்ளூராட்சி மட்டத்தில் மாநகரசபைகள், நகரசபைகள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களும் குடிமக்களின் சர்வஜன வாக்குரிமை மூலம் தெரிவு செய்யப்படுகின்றனர்.

தேர்தல் ஒன்றுக்கான அறிவித்தல் வெளியானதன் பின்னர், அத்தகைய தேர்தல் காலப் பகுதியினுள் வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள், கட்சிகளின் முகவர்கள் மற்றும் ஆதரவாளர்களும் தேர்தல் சட்டத்திற்கு அமைவாக செயல்படவேண்டும். தனது வேட்பாளர் நிலையை ஊக்குவிப்பதற்காக செய்யப்படுகின்ற அலங்கரிப்புகள், கட்சி அலுவலகங்களை ஆரம்பித்தல், அரசியல் கூட்டங்களை ஒழுங்கு செய்தல், சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளின் நிமித்தம் சட்டங்களும் விதிகளும் ஆக்கப்பட்டுள்ளதைப் போலவே தேர்தல் நடவடிக்கைகளுக்காக பொதுச் சொத்துக்கள் பயன்படுத்தப்படுவதை தடுக்கும் வகையில் தேர்தல் ஆணைக்குழுவினால் கடுமையான சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன.
அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்தினால் பராமரிக்கப்படுகின்றன ஏதேனும் அசையும் அல்லது அசையா சொத்துக்கள் பொதுச் சொத்துக்கள் என அழைக்கப்படுகின்றன. தேர்தல் ஒன்றுக்கான அறிவிப்பு வெளியானதன் பின்னர், பலதரப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய கட்டளைகளை பிறப்பிப்பதற்கு அரசியலமைப்பின் ஊடாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் கிடைக்கின்றது. அந்த அதிகாரங்களுக்கு அமைய தேர்தல் ஆணைக்குழு, பொதுச் சொத்துக்கள் தவறாக பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்குரிய கட்டளைகளைப் பிறப்பிக்கிறது. இங்கு பொதுச்சொத்துக்களானவை அரச உத்தியோகத்தர்கள், அரசாங்கத்தின் வாகனங்கள், அரசாங்கத்தின் அலுவலகங்களும், கட்டடங்களும், அரசாங்கத்தால் நடாத்தப்படுகின்ற வைபவங்கள், நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள், அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற கொடைகள் மற்றும் விசேட செயல்திட்டங்கள் போன்ற வகைப்படுத்தலுக்கு உள்ளாவதோடு தேர்தல் காலத்தில் அவற்றை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது பற்றியும் விபரிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, தேர்தல் காலத்தில் வேட்பாளர்களின் தேர்தல் நடவடிக்கைகளுக்காக எவ்விதத்திலும் அரசாங்கத்தின் வாகனங்களைப் பயன்படுத்த முடியாது. அதேபோல், அரசாங்க வாகனங்களின் ஓட்டக் குறிப்புகளை முறையாக பேண வேண்டும்.

2ம் பக்கம் →



# விவசாயிகளின் உரிமையை தகவல் அறியும் சட்டத்தின் மூலம் எவ்வாறு பாதுகாக்கலாம்?

விவசாயத்தை சீவனோபாயமாகக் கொண்ட பெருந்தொகையான மக்கள் வாழும் எமது நாட்டில் கமக்காரர்களின் சேம நலனைக் கட்டியெழுப்பி அவர்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் கமநல அபிவிருத்தி அதிகார சபையின் தலையாய கடமையாகும். அந்த வகையில் அதற்காக ஒதுக்கப்படுகின்ற நிதி உரிய முறையில் பயன்படுத்தப்படுகின்றதா? இல்லையா? என்பதை ஆராய்தல் இலங்கையில் வாழும் ஒவ்வொரு பிரஜையினதும் பொறுப்பும் உரிமையும் ஆகும். ஆகவே, இங்கு தகவல் அறியும் உரிமையை பிரஜைகள் வெற்றிகரமாக பயன்படுத்தியுள்ள சந்தர்ப்பங்கள் பற்றி ஆராயப்படுகிறது.

கமநல அபிவிருத்தி அதிகார சபையால் கடந்த ஐந்து வருட காலத்தில் நிதி ஒதுக்கப்பட்ட செயல் திட்டங்கள், சபையினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் வலஸ்முல்ல பிரதேசத்தில் கொஹோலான எனப்படும் வயற் காணிக்கு தண்ணீரைக் கொண்டு செல்லும் கால்வாய் புனரமைப்பு செய்யப்படாமைக்கான காரணத்தைக் கண்டறியும் வகையில் பிரஜை ஒருவரினால் தகவல் அறிவதற்கான கோரிக்கையொன்று விடுக்கப்பட்டது. அதிகார சபை தகவல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்த நபருக்கு தெரியப்படுத்தியிருந்தபோதும், அவர் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவில் மேன்முறையீடு செய்ததால், அந்த ஆணைக்குழு கொண்டுள்ள அதிகாரங்களின் பயனாக இரண்டு தரப்பினரும் அதிகார சபைக்கு அழைக்கப்பட்டு மேன்முறையீடு பற்றிய விசாரணை நடத்தப்பட்டது. அதற்கு இணங்க கோரிக்கை விடுத்தவருக்கு சபையின் முன்னிலையில் கருத்து தெரிவிக்க வாய்ப்பு கிடைத்தது. பொது அதிகார சபை தகவல் பெற்றுக்கொள்ளப்படுவதை அநீதியான முறையில் நிராகரித்திருந்தால், அது சம்பந்தப்பட்ட மேன்முறையீட்டு விசாரணையின் பின்னர் கோரிக்கை விடுத்தவருக்கு தகவல்களை விடுவிக்குமாறு கட்டளையிடும் சிறப்பு அதிகாரம் ஆணைக்குழுவுக்கு உள்ளது. அதன்படி கோரிக்கை விடுத்த நபருக்கு தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு கிடைத்தது.

பொது அதிகார சபைகள், பொது மக்களின் பணம் பயன்படுத்தப்படும் விதம் நிதியினைப் பயன்படுத்தி முன்னெடுக்கும் செயல் திட்டங்கள் தொடர்பாக மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். குருணாகல் மாவட்டத்தில் விவசாயத்திற்குத் தேவையான தண்ணீரைப் பெற்றுக்கொள்ளும் ஒரு கால்வாயை அபிவிருத்தி செய்யவதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருந்தபோதும், அந்தக் கால்வாய் அமைக்கப்படாததன் காரணமாக ஒரு பிரஜையினால் தகவல் அறியும் உரிமையின் அடிப்படையில் அந்த விடயம் கேள்விக்கு உட்படுத்தப்பட்டது. அதில் கமநல அபிவிருத்தி அதிகார சபை வசமுள்ள கருத்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட தகவல்கள் சேகரிக்கப்பட்ட அறிக்கை கோரப்பட்டிருந்தது. எனினும், பொது அதிகார சபையிடமிருந்து கிடைத்த பதில் திருப்தியளிக்காததால் தகவல் அறியும் ஆணைக்குழுவில் மேன்முறையீடு செய்யப்பட்டது. ஆணைக்குழு முன்னிலையில் கருத்து தெரிவித்த மேன்முறையீட்டாளர் ஒதுக்கப்பட்ட நிதிக்கு என்ன ஆனது? என்பதை அறிந்துகொள்வதற்கும், செயல் திட்டத்தின் முன்னேற்றத்தை அறிந்துகொள்வதற்கும் தகவல்களை கோரியிருந்தேன் எனக் கூறினார். ஆயினும், அந்த அறிக்கைகள் ஏற்கனவே குளியாப்பிட்டி மாவட்ட நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால் தகவல்களை வழங்க முடியாதென பொது அதிகார சபை சுட்டிக்காட்டியது. அதற்கு ஆணைக்குழு, நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள தகவல்களாக இருந்தாலும் கோரிக்கை விடுத்தவருக்கு பெற்றுக்கொள்ள முடியுமெனத் தெரிவித்தது. மேன்முறையீடு ஒன்றின்போது பொது அதிகார சபை நியாயமான காரணத்தின் அடிப்படையில் தகவல் வழங்கவில்லையா என்பதையும், பொது அதிகார சபையானது சட்டத்திற்கு அமைவாக செயற்பட்டுள்ளதா என்பதையும் ஆராய்ந்து பிரஜைகளுக்கு அவர்களுடைய உரிமைகளை வென்றெடுப்பதற்கு கூடுதலான அவகாசம் வழங்கப்பட்டுள்ளமை இந்த மேன்முறையீட்டு விசாரணை மூலம் தெளிவாகிறது.

விவசாயிகளுக்கு நிவாரணமாக அமையும் விதத்தில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் இவ்வாறான நீர்ப்பாசன செயல் திட்டங்கள், உர மானிய நிகழ்ச்சித்திட்டங்கள், விவசாய இயந்திரங்களுக்காக வழங்கப்படும் மானியம் மற்றும் உணவுப் பயிர்கள் நாசமடையும்போது விவசாயிகள் இழப்பீடு பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் மற்றும் அதற்கான வழிமுறைகள் அத்தோடு அரசாங்கம் அதற்காக எவ்வளவு நிதியை ஒதுக்கியுள்ளது, அவற்றை விவசாயிகளுக்கு எவ்வாறு பகிர்ந்தளிப்பது அதேபோல் தற்போதைய பச்சை வீட்டுக் கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக விவசாயக் கடன் வழங்குதல், கமக்காரர் ஓய்வூதியம், விவசாயிகளின் உற்பத்தி வினைத்திறனையும் வருமானத்தையும் உயர்த்துவதற்காக அரசாங்கத்தால் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் போன்ற விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்ள தகவல் அறியும் உரிமையைப் பயன்படுத்தலாம்.

1ம் பக்கம் தொடர்ச்சி

## நாம் நேர்மையான தேர்தலுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்.

தேர்தல் காலப்பகுதியில் அதிகாரத்திலிருந்த ஒவ்வொரு கட்சியும் கூடிக் குறைந்த அளவில் அரசாங்கத்துக்குச் சொந்தமான சொத்துகளை, வேட்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் பயன்படுத்தியுள்ளமை கடந்த கால தேர்தல்களை ஆராயும்போது வெளிப்படையாகத் தெரிகிறது. 2016ம் ஆண்டுக்கு முன்னர் பொதுச் சொத்துக்கள் ஏதோ ஒரு வகையில் தவறாக பயன்படுத்தப்பட்டிருந்தால், பொதுமக்கள் அது குறித்து நேரடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பும் அவகாசம் அல்லது வழிமுறை இருக்கவில்லை. ஒரு பிரஜை என்ற வகையில் அன்று தேர்தல் திணைக்களத்திற்கு (தற்போது தேர்தல் ஆணைக்குழு) முறைப்பாடு செய்யக் கூடிய நிலை இருந்தது. எவ்வாறாயினும், அவ்வாறு செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் எத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டது, குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டனரா போன்ற விடயங்களின் முன்னேற்றத்தை அறிந்து கொள்வதற்கு பொறிமுறையொன்று இருக்கவில்லை. எனினும், இன்று அந்தக் குறையை போக்கும் வகையில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை பயன்படுத்தும் வாய்ப்பு பிரஜைகளுக்கு கிடைத்துள்ளது.

தேர்தல் காலத்தில் செய்யப்படுகின்ற நிவாரணப் பங்கீடு, தொழில் வழங்கல், தனிப்பட்ட தேர்தல் நடவடிக்கைக்காக அரசாங்க கட்டடங்களை பயன்படுத்துதல் போன்ற தேர்தல் சட்ட மீறல் குறித்த நடவடிக்கைகளை தகவல் அறியும் உரிமையைப் பயன்படுத்தி கேள்விக்கு உட்படுத்த முடிவதோடு, அவ்வாறு இடம்பெறுகின்ற சட்டவிரோத நடவடிக்கைகளை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தும் வாய்ப்பும் கிடைக்கின்றது. இந்த அனைத்து செயற்பாடுகளும் இறுதியில் நீதியான தேர்தல் ஒன்றை நடாத்துவதற்கு உதவியாக அமையும்.



# இரண்டே நாட்களில் தகவல்களைப் பெறுவோம்




2019 இலங்கையில் பரபரப்புகளுக்கு பஞ்சம் இல்லாத ஓர் ஆண்டு. போதைப்பொருள் குற்றங்களுக்காக நீதிமன்றத்தால் மரண தண்டனை பெற்ற நால்வருக்கு அந்த தண்டனையை நிறைவேற்ற எடுத்த தீர்மானம் அதில் ஒன்று. சிறைக் கைதிகளும் மனிதர்களே என்ற வாசகம் சிறைச்சாலையின் நுழை வாயிலில் எழுதப்பட்டிருந்தாலும் மரண தண்டனையை நிறைவேற்ற வேண்டுமா? வேண்டாமா? என்பது இன்றும் விவாதத்திற்கு இடமின்றி சார்பான அதேபோல் எதிரான கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்ற ஒரு தலைப்பாக மாறியுள்ளது. அம்னஸ்டி இன்டர்நெஷனல் நிறுவனத்திற்கு அமைவாக 2019ம் ஆண்டளவில் 110 நாடுகள் மரண தண்டனையை தடை செய்துள்ளதோடு, 56 நாடுகளில் அது நடைமுறையில் உள்ளது. எமது நாடு இந்த இரண்டுக்குள்ளும் அடங்கவில்லை. மரண தண்டனை சட்டத்தால் தடை செய்யப்படாவிட்டாலும் அது நடைமுறையில் இல்லாத நாடுகளின் பட்டியலில் நாம் இருக்கின்றோம். இலங்கையில் இறுதியாக 1976இல் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னர் 43 ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் இருந்த இந்த தண்டனை மேலே தெரிவிக்கப்பட்டுள்ள சம்பவத்தால் மீண்டும் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தகவல் அறியும் உரிமையைப் பயன்படுத்தலாமா? எவ்வாறு பயன்படுத்தலாம்? என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். பொதுவாக தகவல் பெறுவதற்கான கோரிக்கை ஒன்றை பொது அதிகார சபையொன்றில் சமர்ப்பித்த பின்னர் 14 வேலை நாட்களுக்குள் தகவலை வழங்க முடியுமா? முடியாதா? என்பதை கோரிக்கை விடுத்த நபருக்கு தெரியப்படுத்த வேண்டும். எனினும், அவசர நிலையொன்றில் பொதுவான வழிமுறையிலிருந்து விலகி துரித கதியில் தகவலை வழங்கக் கூடிய ஒரு வழிமுறையும் சட்டத்தில் உள்ளது. சட்டத்தின் 25ஆவது பிரிவுக்கு அமைய ஒரு பிரஜையின் உயிர் மற்றும் தனிப்பட்ட சுதந்திரம் சம்பந்தப்பட்ட தகவல்களைப் பெற கோரிக்கை விடுக்கப்பட்டால் 48 மணித்தியாலங்களுக்குள் அதற்குப் பதிலளிக்க வேண்டும்.

சென்ற ஆண்டில் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல நான்கு சிறைக் கைதிகளுக்கு எதிராக மரண தண்டனையை நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டதையடுத்து பிரஜைகள், சிவில் அமைப்புகள் மற்றும் ஒரு சில அரச நிறுவனங்கள் அது பற்றிய தகவல்களைக் கோரியிருந்தன. சிறைச்சாலைகள் திணைக்களம், ஜனாதிபதி அலுவலகம் அத்தோடு அப்போதைய நீதி அமைச்சு ஆகிய மூன்று நிறுவனங்களிடம் மரண தண்டனை நிறைவேற்றப்பட விருந்தவர்களின் பெயர்கள், ஏனைய சிறைக் கைதிகளிலிருந்து இந்ந நால்வர் தெரிவு செய்யப்பட்டதன் அடிப்படை, மரண தண்டனை நிறைவேற்றப்படும் திகதி மற்றும் வேறு சில கேள்விகளும் கேட்கப்பட்டன. இங்கு நான்கு சிறைக் கைதிகளுக்கு எதிராக மரண தண்டனை நிறைவேற்றப்படவிருந்தமை, அதனால் அவர்களின் உயிர் மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்ற அடிப்படையில் இத்தகவல்களை நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குள் வழங்க வேண்டுமென கோரப்பட்டிருந்தமை முக்கிய அம்சமாகும். இதில் மேலும் இரண்டு முக்கிய தகவல்கள் உள்ளன. முதலாவது, இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் மேன்முறையீட்டு நடவடிக்கை பொதுவான வழிமுறையிலிருந்து மாறுபடுகிறது. அதாவது, மேன்முறையீட்டு உத்தியோகத்தரிடம் மேன்முறையீடு செய்வதற்குப் பதிலாக, நேரடியாகவே தகவல் அறியும் ஆணைக்குழுவில் மேன்முறையீடு செய்யலாம். இரண்டாவது, ஆணைக்குழுவின் முன்னிலையில் நடத்தப்படும் மேன்முறையீட்டு விசாரணை ஓரிரு வாரங்களினுள் ஆரம்பிக்கப்பட வேண்டும். இந்த இரண்டு விடயங்கள் தொடர்பில் தகவலுக்கான உரிமைச் சட்டத்தில் ஏற்பாடுகள் இல்லாதபோதும் நடைமுறையில் அதன் செயற்பாடுகள் இங்கு சொல்லப்பட்டுள்ளவாறு அமையும்.

தம்முடைய அல்லது எந்த ஒருவரினதும் உயிர் மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்கு பங்கம் ஏற்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக துரித கதியில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறையொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, மரண தண்டனை சம்பந்தப்பட்ட மேன்முறையீடு தொடர்பிலும் ஆணைக்குழு மேலே சொல்லப்பட்ட நடைமுறையைப் பின்பற்றி துரிதமாக மேன்முறையீடுகளை விசாரணை செய்வது பாராட்டத்தக்கது. அதேபோல் பிரஜைகளாகி நாமும் இது பற்றி அறிந்திருப்பது கட்டாயமாகும்.